தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்திரவு

பிறப்பிப்பவர்: திரு. க.கண்ணன், M.A., B.Ed.,

நக.எண். 10970/2024/எம்சிஎப்1, நாள். .04.2025

பொருள்	மனைப்பிரிவு – தஞ்சாவூர் மாநகராட்சி – சர்வே வார்டு எண். 2, பிளாக் 27, நகரளவு எண்கள். 702/1, 702/2, 703/1, 703/2, 706/3, 706/4, 706/5, 706/6, 706/7, 706/8, 706/9, 706/10 மற்றும் 706/11 - ல் 18692.00 ச.மீ குடியிருப்பு மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.
பார்வை	1. தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் நக.எண். FBOV4UO6 (31978)/2024/TCP, நாள். 22.08.2024-ல் இணைத்து வரப்பெற்ற திருத்திய மனைப்பிரிவு அனுமதி வரைபடம் ம.வ/த.உ.தி.கு. எண் SWP/30/2024, திட்ட அனுமதி எண். 61/2024. 2. மனுதாரர்களின் தானப்பத்திர ஆவண எண். 3218/2024, நாள்.14.08.2024. 3. மாமன்றத் தீர்மான எண். 411, நாள் 28.03.2025.

****

உத்தரவு:

தஞ்சாவூர் மாநகரம், சர்வே வார்டு எண். 2, பிளாக் 27, நகரளவு எண்கள். 702/1, 702/2, 703/1, 703/2, 706/3, 706/4, 706/5, 706/6, 706/7, 706/8, 706/9, 706/10 மற்றும் 706/11 - ல் 18692.00 ச.மீ பரப்பளவு இடத்தை குடியிருப்பு மனைப்பிரிவு செய்ய தங்களால் அனுமதி அளிக்க கோரப்பட்டதற்கிணங்க பார்வை (1)ல் கண்டுள்ள உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டது.

மேற்படி மனைப்பிரிவில் தென்வடலான (1) தென்வடலான 12.20 மீ அகல திட்ட சாலை எண்.1 (1542.65 ச.மீ) (2) கிழமேலான 12.20 மீ அகல திட்ட சாலை எண்.2 (1666.22 ச.மீ) (3) கிழமேலான 9.15 மீ அகல திட்ட சாலை (451.13 ச.மீ) (4)கிழமேலான 7.2 மீ அகல மனைப்பிரிவு சாலை எண். 1 (449.65 ச.மீ) (5) கிழமேலான 7.2 மீ அகல மனைப்பிரிவு சாலை 2 (424 ச.மீ) (6) தென்வடலான 7.2 மீ அகல மனைப்பிரிவு சாலை 3 (369.66 ச.மீ) (7) தென்வடலான 7.2 மீ அகல மனைப்பிரிவு சாலை 4 (222.78ச.மீ) (8) கிழமேலான 7.2 மீ அகல மனைப்பிரிவு சாலை 5 (418.25 ச.மீ) (9)கிழமேலான 3.05 மீ அகல மனைப்பிரிவு சாலை விஸ்தரிப்பு (203.64 ச.மீ) (10) மூலை முடுக்குகள் 19.74 ச.மீ (11) பூங்கா I – 920.76 ச.மீ பரப்பளவு இடம் , (12) பூங்கா II 371.33 ச.மீ பரப்பளவு இடம், (13) பூங்கா III – 56.39 ச.மீ பரப்பளவுள்ள இடம் (14) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டிய ஸ்தலம் 65.03 ச.மீ பரப்பளவுள்ள இடம் (15)மின்சார வாரியத்திற்குண்டான 65.03 ச.மீ பரப்பளவு இடம் ஆகியவற்றை பார்வை (2)ல் கண்டுள்ள தானப்பத்திரம் வாயிலாக தங்களால் இம்மாநகராட்சி

ஆணையர் பெயரில் 12.08.2024-ல் தானமாக அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் இம்மாநகராட்சியின் பொறியியல் பிரிவின் குறிப்பின் படி, பராமரிப்பிற்கான முன் வைப்புத் தொகை ரூ. 4,50,000/- (ரசீது எண்.107/05/1/24-25/0020828 நாள். 26.03.2025) மற்றும் ரூ. 50000/- (ரசீது எண்.107/05/1/24-25/0020930 நாள். 27.03.2025 மற்றும் மனை அனுமதி கட்டணம் ரூ. 32250/- (இரசீது எண். 107/05/24-25/0020936, நாள். 27.03.2025) தங்களால் இம்மாநகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை (3)ல் இம்மாமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை (1)ல் கண்டுள்ள உதவி இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதி மற்றும் நிபந்தனைகளின் படியும், பார்வை (3)ல் கண்டுள்ள மாமன்ற ஒப்புதல் படியும் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி உத்தரவு வழங்கப்படுகிறது.

இணைப்பு : உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடிதம்
மற்றும் மனைப்பிரிவு வரைபடம்.

ஆணையாளர்,
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்:

திரு.S. ஞானசேகரன் மற்றும் 5 நபர்கள்
மேலவீதி,
தஞ்சாவூர்.

நகல் :

1. மாநகராட்சி உதவிப் பொறியாளர், , தஞ்சாவூர் மாநகராட்சி (சாலை பதிவேட்டில் பதிவு செய்ய ஏதுவாக)
2. நகரசார் ஆய்வாளர், தஞ்சாவூர் மாநகராட்சி. (நகரளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்ய ஏதுவாக)
3. உதவி வருவாய் அலுவலர், தஞ்சாவூர் மாநகராட்சி (காலிமனை வரி தொடர்ந்து வசூல் செய்திட ஏதுவாக)